//அவசரம் // // தனிகவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3516/ஆ4/2024, நாள் 03.10.2024

– – –

பொருள் : தேர்வுகள் – அரசு/நகரவை/ஆதிதிராவிடர் நல/ அரசு நிதியுதவிப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக்பள்ளிகளில் – 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு செப்டம்பர் 2024 காலாண்டுத் தேர்வுகள் தேர்ச்சி விவரங்கள் கோருதல் – சார்பாக.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 19.09.2024

– – –

அரசு /நகரவை /ஆதிதிராவிடர் நல/ அரசு நிதியுதவிப் உயர்/ மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக்பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் செப்டம்பர் 2024 காலாண்டுத் தேர்வுகள் முடிந்த உடன் மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் சார்ந்த விவரங்கள் தயார் செய்யும் பொருட்டு இத்துடன் இணைப்பில் காணும் Excel File –னை பதிவிறக்கம் செய்து , பத்தாம் வகுப்பு ,மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்களின் விவரங்களை தட்டச்சு செய்து தயார் நிலையில் வைத்திருக்க அரசு /நகரவை /ஆதிதிராவிடர் நல / அரசு நிதியுதவி உயர் / மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்களுக்கு பார்வையில் காணும் இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகளின் படி தெரிவிக்கப்பட்டது .

மேலும் காலாண்டுத் தேர்வுகள் விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கும் நாளான 07.10.2024 அன்று மாலை 4.00 மணிக்குள் தேர்ச்சி சதவிகிதம் சார்பான Excel படிவத்தினை எவ்வித கலங்களும் விடுபடாமல் பூர்த்தி செய்து இணைப்பில் காணும் **Google Forms link**–ல் பதிவுகள் மேற்கொண்டு excel file –லில் உள்ள முதல் நான்கு பக்கங்களை மட்டும் (Abstract, Sslc Subject wise ,first year subject wise, second year subject wise ) வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் 08.10.2024 அன்று மாலை 4.00 மணிக்குள் நேரில் சமர்பிக்க அனைத்து அரசு /நகரவை / ஆதிதிராவிடர் நல / அரசு நிதியுதவி உயர் / மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

இணைப்பு :

- **EXCEL FILE (7 sheets) மற்றும் Google Forms Link**
  1. Sheet 1–Abstract
  2. Sheet 2–Sslc Subject Wise
  3. Sheet 3–First Year Subject wise
  4. Sheet 4–Second Year Subject Wise
  5. Sheet 5–Sslc Result data (student & teacher wise)
  6. Sheet 6– First Year Result data (student & teacher wise)
  7. Sheet 7– Second Year Result data (student & teacher wise)

//ஓம்.//
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1) அனைத்து அரசு/நகரவை/ஆதிதிராவிடர் நல/ அரசு நிதியுதவிப்பள்ளி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.
2) மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.